DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-28/2023

Prosecution witness – PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.மைமூன்பீவி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A3 present. A4 absent. Petiton filed and allowed)

30.06.2026 – 11.50 AM

முதல் விசாரணை:-

1. நான் சிக்கலில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்னதாக மதினா நகரிலுள்ள எனது தங்கையான அ.சா.1ன் வீட்டிற்கு சென்ற போது அ.சா.1 என்னிடம் அவரது கணவரான அ.சா.2 ஐ அவரது தம்பி கனி என்பவர் அடித்து விட்டதாகவும், அதனால் சிக்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பதாகவும் தெரிவித்தார். அன்றைய தினமே காலை 10.30 மணியளவில் நானும், எனது மகன் ராஜா உசேன் என்பவரும் அ.சா.1ன் வீட்டில் இருந்த போது சிக்கல் போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வைட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடமும், எனது மகனும் சாட்சிகளாக இருக்குமாறு கேட்டுக்கொண்டதால் நானும், எனது மகனும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –**

நான் சிக்கலில் காவல் நிலையத்திற்கு அருகே குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சென்ற போது அ.சா.1 மட்டும் வீட்டில் இருந்தார். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. சண்டை நடந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன். எங்கு சண்டை நடந்தது என்றால் அ.சா2ன் வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் ஒரு காலி இடத்தில் சண்டை

நடந்ததாக போலீசார் சொன்னார்கள். சம்பவ இடத்திற்கு அருகே நிறைய குடியிருப்பு வீடுகளும் உள்ளன. அந்த வீடுகளில் போலீசார் வந்து விசாரித்தபோது ஆட்கள் இருந்தார்களா என்றால் ஆமாம் இருந்தார்கள். அவர்களை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறியபடி போலீசார் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் பெறவில்லை என்றாலும், எனது அக்காவிற்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து போலீசாரிடம் கையொப்பம் செய்து கொடுத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திருமதி.தங்ககார்த்திகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
கடலாடி,